[1979 மார்ச் 7

ஆட்டோ ரிக்ஷா, டாக்சி ஓட்டுநர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்.

*வினா எண். 268—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களுக்கும், டாக்சி ஓட்டுநர்களுக்கும் குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவரவர்களே, ஆட்டோரிக்ஷா ஓட்டுநர்களுக்கும், டாக்சி ஓட்டுநர்களுக்கும் குறைந்தபட்ச கூலி அல்லது அதிகபட்ச கூலி நிர்ணயிப்பதைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த யாருக்கும் ஆட்சேபனை கிடையாது. அதே நேரத்தில் இந்தக் கேள்வி நேரத்தைப் பயன்படுத்தி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் குற்ற பரம்பரையினரைப் பார்ப்பது போல் இந்த மாநகராட்சி எல்லைக்குள் இருக்கின்ற ஓட்டுனர்கள்—நான் எல்லோரையும் குறிப்பிடவில்லை—நல்லவர்களும் இருக்கிறார்கள்—நான் சொல்வதை எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால், ஏற்றிக் கொள்வது கிடையாது. இதைத் தவிப்பதற்கு அரசு ஏதாவது விதிமுறைகளைக் கையாள முன்வருமா? இதில் காவல் துறை ஈடுபடுகின்றதா என்று தெரியவில்லை. அவர்களிடம் எப்படிக் கேட்டாலும் ஒரு ரூபாய் அதிகமாகத் தருகிறோம் என்றாலும் ஏற்றிக் கொள்ள மறுக்கிறார்கள். நான் எல்லோரையும் சொல்லவில்லை. அவர்களில் நல்லவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அதிகமானவர்கள் இப்படிப்பட்ட சிரமங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆட்டோ ரிக்ஷாவிலே தாங்கள் பெயரைச் சொல்லி, சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லியா ஏறப்போகிறீர்கள்.

1979 மார்ச் 7]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் என்று தப்பித் தவறி அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் எங்களைக் குற்றப் பரம்பரையினரைப் பார்ப்பது போல் பார்க்கிறார்கள். எங்களை ஏற்றிக் கொள்ள மறுக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி அவர்களுக்கு கூலி நிர்ணயிப்பதைப் பற்றி. அவர்களுக்கு இது சாதகமான கேள்வி. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது அவர்களுக்குப் பாதகயான கருத்து. இருப்பினும் இதைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். தற்சமயம் தொழிலாளர்களுக்கு பல இடங்களில் ஊதியம் நிர்ணயிக்கப்படுகின்ற முறை, அவர்களுடைய சராசரி ஊதியம், தொழிலதிபர்கள் தொழிலாளர்களிடையே உள்ள உறவு (Relationship of Master is and Servant) போன்ற விவரங்களை ஆராய வேண்டியிருக்கிறது. இது தொடர்பாக போக்குவரத்து ஆணையாளரிடம் தகவல் கோரப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாவில் மூன்று பேர்கள் போக அனுமதிக்கப்படுமா?

HON. THIR. S. RAGHAVANANDAM : As I have already once said the Hon. Members dialling a wrong number. The question relates to Transport Minister.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ராங்டையல் நம்பர், ரைட் நம்பர் என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றி எனக்குத் தெரியாது. நான் சாதாரண உறுப்பினர். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, அவர்களுடைய குறைந்தபட்ச கூலி நிர்ணயிப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை எதற்காகக் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஓட்டுநரைப் பற்றி குறிப்பிடப்படுவதால், தொழிலாளர் பிரச்சினை இது. உங்களுக்குச் சம்பந்தமானது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயிப்பதில், தி. மு. கழகம் எதிராகக் கருதுவது போல் அவர்கள் தங்கள் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதனால்தான், இதைத் தன்னிலை விளக்கமாக நான் இதைக் கூறுகிறேன்.